ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2065/19 - 2018 අප්‍රේල් මස 03 වැනි අඟහරුවාදා - 2018.04.03

*2065/19 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 03 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை நியமித்தல்

*ஊவா மாகாணத்தின் மாகாண சபை*

*1972 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வீட்டு வாடகைச் சட்டம்*

ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் வீதி அபிவிருத்தி, வீடமைப்பு, நீர் வழங்கல், தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் கூட்டுறவு விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் அகலன் செந்தில் தொண்டமான் எனும் நான், 2010 ஆம் ஆண்டின் இலக்கம் 05ஐக் கொண்ட ஊவா மாகாண மாகாண சபையின் வீட்டு வாடகை யாப்பின் 5(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்க வேண்டிய 1972 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வீட்டு வாடகைச் சட்டத்தின் 44 வது பிரிவின் மூலம் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக, 2017.10.01 ஆந் திகதியிலிருந்து ஊவா மாகாணத்தின் பதுளை மற்றும் மொனராகலை ஆகிய இரண்டு மாவட்டங்களில் 1972 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வீட்டு வாடகைச் சட்டத்தின் ஒழுங்கு விதிகள், பணிகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுவதற்காக அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாக ஊவா மாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதி உயர் வகுப்பின் வாசல பண்டார முதியான்சலாகே ஜயந்த புஷ்பகுமார அவர்களை நியமித்துள்ளதாக இதன் மூலம் அறிவிக்கின்றேன்.

அகலன் செந்தில் தொண்டமான்,
வீதி அபிவிருத்தி, வீடமைப்பு, நீர் வழங்கல்,
தோட்ட உட்கட்டமைப்பு மற்றும்
கூட்டுறவு அமைச்சர்,
ஊவா மாகாணத்தின் மாகாண சபை.

அமைச்சர் அலுவலகம்,
ஆர். எச். குணவர்தன மாவத்தை,
பதுளை,
2018, மாச்சு 29.

*04 - 627*